# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 15/2024**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர். பிரபாகரன் | Caste: | |
| Father's Name: | ராமசாமி | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 33 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.12.2025

( எதிரி ஆஜர்.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் தற்போது கமுதி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக கடந்த மூன்று ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.02.2024 ம் தேதி மாலை 7.30 மணியளவில் நான் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 60 வயது மதிக்கத்தக்க செங்கபடை கிராமத்தை சேர்ந்த செல்லையா மகன் புஷ்பராஜ் என்பவர் அவரது உறவினரான மாணிக்கம் என்பவர் மூலம் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் 08.02.2024 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் கலைக்குளம் கண்மாயில் வைத்து கம்பால் தாக்கியதில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதிக்கையில் அவரது இடது நடுவிரலில் 3x0.5x0.5 cm அளவில் சிதைந்த காயம் இருந்தது. அந்த காயத்திற்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் Proximal Interphalangeal Joint dislocation இருந்தது தெரியவந்தது. அதற்காக சிகிச்சை வழங்கப்பட்டது.

அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.5**. அதே தினம் மாலை 7.35 மணியளவில் நெடுங்குளம் கிராமத்தை சேர்ந்த சொக்கலிங்கம் மனைவி இருளாயி என்பவர் தனது உறவினரால் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவரும் தன்னை 08.02.2024 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் அடையாளம் தெரிந்த ஒரு நபரால் கலைக்குளம் கண்மாயில் வைத்து கம்பால் தாக்கப்பட்டதில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதிக்கையில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 17:48:03 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)